V. [illegible]

V. II No6 Jun 192

JL
[illegible] N198A
N29. 11. 6.

210775

JUN 1930

REGD NO: M 1530.

# "BALAVINODHINI"







CHILDREN'S FRIEND

# பாலவிநோதினி

குழந்தைகளின் அன்பன்.

ஆசிரியர்:
வரகவி திரு. அ. சுப்பிரமணியபாரதி

Vol XI | JUNE 1929 | No 6





PRINTED AND PUBLISHED
BY
V. RAMASWAMY SASTRULU & SONS
323, Tiruvottiyur High Road
Tondiarpet, MADRAS.



N B:—The Subscribers are requested to pay subscriptions to our agents only on obtaining our Bonafide receipts.

***All Rights Reserved by the Publishers.***

# பாலவிநோதினி

## CONTENTS—பொருளடக்கம்


| | பக்கம். |
|---|---|
| தெய்வ வணக்கம் ... ... | 257 |
| ஹிதோபதேசம் ... ... | 258, 259 |
| தெய்வமகிமை ... ... | 260—269 |
| சிறந்த போதனை ... ... | 270—273 |
| கௌரவர் சொன்னபடி பாண்டவர் வாரணாவதம் சென்றபோது விதுரர் அவர்களுக்குச் சொன்ன ஒன்பது யுக்திகள் ... ... | 274, 275 |
| கலிகாலக் கொடுமை ... ... | 275 |
| சிக்கன வழக்கம் ... ... | 276—283 |
| ஐயூப் ... ... ... | 284—294 |
| அதிக ஆசைப்பட்ட சோதிடன் ... | 295—298 |
| எளிய சம்சாரி அல்லது 'அதிர்ஷ்டத்துக்குப் புத்தி அநுசரணை' ... | 299—304 |


குறிப்பு:—எமது கையொப்பமிட்ட எமது கம்பெனி ரசீது பெற்றுக்கொண்டு ஏஜண்டுகளிடம் சந்தாத் தொகையைச் செலுத்தக் கோருகிறோம். எமது ரசீது இல்லாமல் போனால் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

உ

செந்திலாண்டவன் திருவடி துணை

# பாலவிநோதினி

அல்லது

## குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 11 | 1929௵ ஜூன் மாதம் | பகுதி 6

### தெய்வ வணக்கம்

சீலமிகு தற்பரனை யுன்னித்த தேகத்
    தியானத்தெழுந்து பொங்கிச்
சில்லென்று மெய்மறந் தானந்த மவுனம்
    செனிக்கக்குவிந்து கண்ணீர்
ஆலிபொழி யக்கருணை யுள்ளங் கனிந்துருக
    அன்புருக வென்புருகவே
அங்கங் குழைந்து புளகிக்க நின்றுருகுவார்
    அப்படியும் ஒன்றறிவனோ
காலங் கழித்துண்டு வீணுக் குழைத்துபல
    காலம்பிர பஞ்சமாயக்
கடற்குட் படிந்தே கிடக்கின்ற பாசங்
    கடக்கும் படிக்கருளுவாய்
தாலமுழு துண்டு நீலகண்ட கோதண்டமால்
    ஸரஸகோ பாலன் மருகா
சதுர்மறைக ளோதந்த பருமகுரு வாய்வந்த
    சரவணப வானந்தனே. (சுப்ரமண்யதேசிகர்)

210778
சென்னை 600 008

# ஹிதோபதேசம்

(1) கோபம் பாவங்களுக்கெல்லாம் தாய்; தந்தை; குடியைக் கெடுக்கும் கோடாரி; இம்மையிலன்றி மறுமையி லும் துக்கத்தைத் தரும் பெரிய பகை. மேன்மையை அழிக் கும் கொடிய தீ. ஆதலினால் கோபத்தை முதலில் ஒழிக்க முயல்.

(2) சாதுக்களுடைய ஸ்நேகத்தில் இச்சையும், அந்நிய ருடைய நல்ல குணங்களிலே ப்ரீதியும், வித்யாப்யாசத்தில் ஆசையும், மனைவியினிடம் அன்பும், லோக அபவாதத்திலே பயமும், ஈசுவரனிடத்திலே பக்தியும், மனதைப் பலவழிக ளிலே செல்லவிடாமல் அடக்குவதில் சாமார்த்தியமும் துஷ்ட சகவாசத்தில் வெறுப்பும், ஆகிய இந்த நல்ல குணங்கள் எவ னிடம் விளங்குகின்றனவோ அவனை வணங்கு; அவனுடைய ஸ்நேகத்தை அடைய முயல்.

(3) ஆபத்காலத்தில் தைரியங் கொள். பொறுமை யைக் கைவிடாதே. ஸதஸில் தீரமாகப் பேசு. போரில் பரா க்ரமத்தைக் காட்டு. புகழ்ச்சியில் ப்ரீதி வை. வேதசாஸ்திர அப்யாசத்தில் ஆசைகொள்.

(4) தீயவன் வேதசாஸ்திரம் படித்தாலும் வேதம் ஓதி னாலும் அவனை நம்பப்படாது. அவனுடைய இயற்கைக் குணம் அவனை நல்ல வழியிலே நிற்கவொட்டாது. எல்லா குணங்க ளுள்ளும் இயற்கைக் குணமே முன்னுக்கு நிற்கும்.

(5) வியாதியில்லாதவர்களுக்கு ஔஷதம் கொடுப்பது போல் சிலர் தனவான்களைக் கண்டால் விருந்து முதலியன



செய்து உபசாரம் செய்கிறார்கள். தரித்திரர்களைக் கண்டால் தடியெடுத்துத் துரத்துகிறார்கள். இது மகாதோஷம்.

(6) மதுபானம் செய்கிறவர்கள் பொருளைக் கொடுத் துப் பல துன்பங்களை விலைக்கு வாங்கிக் கொள்கிறார்கள். தாயென்றும், தாரமென்றும் மேத்யமென்றும் அமேத்யமென் றும் பேதந்தெரியாமல் வீட்டை விற்றும் மாட்டை விற்றும் உடைமைகளை விற்றும் மானமரியாதை கெட்டும் மதிகெட்டும் விதிகெட்டும் அலைகிறார்கள். பெண்ஜாதி யொருபக்கம் பிள்ளை யொருபக்கமுமாக இருந்து அழுகிறார்கள். கள்ளுக்கடையே காணியாட்சி அவர்களுக்கு, குப்பைமேடே அவர்களுக்குக் குடியிருப்பு. புழுதியே அவர்களுக்குப் போர்வை. சாம்பலே அவர்களுக்கு மஞ்சம். சாணியே அவர்களுக்குத் தலையணை. ஆகாசமே அவர்களுக்கு ஆடை. துன்பங்களே அவர்களுக்குத் துணை. ஆதலால் கள்ளை நினையாதே.

கைப்பொருள் பெற்ற ஞான்றே
கடவுளா லயத்திற் கீந்து
மெய்ப்படு புராண நூல்கள்
விதிமுறை கேட்டு வேந்தும்
வைப்பென இரப்போர்க் கீந்தும்
வருபவர் உளரேல் கூற்றம்
மொய்ப்படு தண்டம் நீங்கி
முன்னவன் இன்பத் தாழ்வார்.
(குசேல உபாக்யானம்)

# தெய்வமகிமை

ஓர் ஊரில் ஒரு வைசியரிருந்தார்; அவர் மகா சிவபக்தர்; பெரிய தனவந்தனர்; ஒழுக்கத்திலுயர்ந்தவர்; சிறந்த ஞானமுடையவர்; பரமசாது. அவர் நாடோறும் சிவபெருமானுடைய தரிசனம் செய்யாமல் போஜனமருந்துவதில்லை. இப்படி யிருக்கையில் இவர் ஒரு நாள் தம்முடைய மைத்துனருடன் சேர்ந்து அயலூருக்குப் போனார். அங்கே சிவாலயமில்லாத படியால், எங்கேனும் அரசமரத்தடியிலேனும் சிவலிங்கமிருக்குமென்று நம்பி அவ்வூரில் பல பக்கங்களுக்கும் சென்று தேடியலைந்தார். அப்படி யலைந்ததில் அவர் களைத்துப் போனார்; பசி பொறுக்க மாட்டாமல் தவித்தார்.

இதைக் கண்ட அவருடைய மைத்துனன் மனம் வருந்தி ஒரு யுக்தி செய்தான். ஒரு புதரில் ஒரு படியைச் சிவபக்தரை யறியாமல் கவிழ்த்து வைத்துவிட்டு அவரிடம் வந்து, "இங்கே ஒரு புதரில் ஒரு சிவலிங்கமிருந்தது. வெகு நாட்களுக்கு முன்பார்த்த ஞாபகம். அதைத் தரிசித்தாற்போதுமா?" என்று கேட்டான். அவர் பரம சந்தோஷமடைந்து "அதைத் தரிசித்தாலும் போதும்!" என "அப்படியா? வாரும்" என்று மைத்துனன் அவரை அழைத்துக் கொண்டு போய்ப் புதரில் தான் மறைத்து வைத்திருந்த படியைக் காட்டினான்.



[illegible]காட்டியதும் சிவபக்தர்க்கு அந்தப் படியானது சிவலிங்கம் போலவே தெரிந்தது. இது கண்டதும் அவர் பேரானந்தமடைந்து பகவானைத் தியானஞ் செய்து பஞ்சாக்ஷர மோதி,

"அரியானை அந்தணர்தம் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர் கடங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும் பற்றப் புலியூரானை
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே."

என்று பாடித் துதித்துப் பணிந்து எழுந்து பெருமகிழ்ச்சிகொண்டு தமது மைத்துனனுடன் ஒரு சோற்றுக் கடைக்குச் சென்று சோறருந்தினர். பின் அவர்களிருவரும் சாவகாசமாய் உட்கார்ந்திருக்கையில் மைத்துனன், "அத்தான் ஒரு வேடிக்கை! அதை இப்போது சொல்லட்டுமா? காலையில் சொல்லட்டுமா?" என்றான்.

அவர் "இப்போதுதான் சொல்லேன்" என, மைத்துனன் கலகலவென்று நகைத்து, பேஷ் "சிவபக்தருக்கெல்லாம் கண் செம்மையாய்த் தெரியாது போலும்" என்றான். அவர், "எப்படிக் கண்டாயதை" என்று கேட்டார். மைத்துனன், "நீர் சோறு தின்னாமல் தவிப்பதைக் கண்டு நான் புதரில் படியைக் கவிழ்த்து வைத்துவிட்டு வந்து உம்மை அழைத்துப் போய்ச் சிவலிங்கம் பாருமென்றேன். நீர் அதைக் கண்டதும்! ஹா

ஹரா என்று கூவிக் கன்னத்தில் அறைந்துகொண்டு சிவ தரிசனம் கிடைத்துவிட்டதாக மகிழ்ந்து உணவருந் தித் திருப்திகரமா யிருக்கிறீர்! உம்மை இனி, படியை வணங்கிய பரமசிவன் செட்டியார் என்று அழைக்கலா மென்று பார்க்கிறேன்'' என்றான்.

சிவபக்தர், "என்ன! நான் வணங்கியது சிவலிங்க மல்லவா? நிச்சயந்தானா? நீ வைத்துவந்த படியா? இது உண்மைதானா? என்ன? என்ன? (யோசித்து) அது எனக்குச் சிவலிங்கமாகத்தானே காணப்பட்டது! நீ விளையாட்டுக்குப் பொய் சொல்லுகிறாய் என்று கருதுகிறேன். சொல் உண்மையை!'' என்றார்.

மைத்துனன், "இனி அதைப்பற்றிப் பேச்சேன்? ஏமாந்தபின் ஆத்திரப்படுவதில் என்ன பயனுண்டு? உப்புக் கண்டம் பறிகொடுத்த பாப்பாத்தியைப்போல் சும்மா இரும்,'' என்றான்.

சிவபக்தர்.—அடே விளையாடாதே! அது சிவ லிங்கமல்லவாயின் நான் இப்போதுண்ட உணவைப் புழுவுக்குச் சமானமாக நினைத்து வாயிலெடுத்துவிட்டுப் பசியுடனிருக்கத் தீர்மானிக்கிறேன். என்ன சொல்லுகிறாய்? என்றார்.

மைத்துனன்.—நீர் பெரும் வைராக்கியத்தில் உம்மை மறந்து பேசுகின்றீர்! இனி வேண்டா மிந்தப் பேச்சு!—என்றான்.



சிவபக்தர்.—அதை யெல்லாம் பேசாதே! அது படியா? சிவலிங்கமா? உண்மையைச் சொல். இப்போது அது எனக்குத் தெரிய வேண்டும்—என்றார்.

மைத்துனன்.—சிவலிங்கந்தான் சும்மா இரும்! என்று புன்சிரிப்புடன் சொன்னான்.

சிவபக்தர்.—நீ இப்படிப் பேசுவது சரியல்ல. உண்மையைச் சொல்.

மைத்துனன்.—நான்தான் படி என்கிறேனே! சும்மா கேட்டால் வைத்தவன் நான்தானே!—என்றான்.

சிவபக்தர்.—அப்படியா, நல்லது. நீ தானே அங்கே படியை வைத்தவன். நான்தானே அதைச் சிவ லிங்கமாகக் கண்டவன். நாம் இருவரும் இப்போது அங்கே போய்ப் பார்ப்போம். நீ சொல்லுகிறபடி அது படியாயிருந்து விட்டதோ நான் இன்றோடு சிவபக்தி செய்வதை விட்டுவிடுகிறேன். நான் சொல்லுகிறபடி அது லிங்கமாய் இருந்துவிட்டால் நீ என்ன செய்கிறாய்?—என்று கேட்டார்.

மைத்துனன்.—நீர் சொல்லுகிறபடி அது சிவ லிங்கமாக இருந்துவிட்டதோ நான் உம்மைப்போல் சிவதரிசனம் செய்தபின்பே போஜனம் மருந்துவதென் கிற விரதம் பூண்பதுமல்லாமல், அந்த இடத்தில் என் சொத்தில் பாதிப் பணம் செலவழித்து அந்த லிங்கத் திற்குக் கோயிலும் கட்டிவைக்கிறேன்—என்றான்.

பின்பிருவரும் ஒரு விளக்குடன் அவ்விடத்திற்

குச் சென்று பார்த்தார்கள். அங்கே மைத்துனன் கவிழ்த்த படி அழகிய சிவலிங்கமாக இருக்கக் கண்டு இருவரும் ஆச்சரியப் பட்டனர். அப்பால், சிவபக்தர் அவனுக்கு "அப்பா நீ கவிழ்த்த படி, என்னுடைய பாவனைக்குத் தக்கபடி அப்போது சிவலிங்கமாக எனக்குத் தென்பட்டது மல்லாமல், இப்போது உண்மையான லிங்கமாகவும் ஆய்விட்டது! இதிலிருந்து உண்மை தெரிந்துகொள். கல் என்கிற பாவனையுடையவனுக்குக் கோயிலிலிருக்கும் சிவலிங்கம் கல்லாகத்தான் தெரியும். சிவபெருமான் என்கிற பாவனையுடைய பக்தனுக்கு அந்தக் கல் சிவபெருமானாகத் தெரியும். இதனால் விளங்குவதென்ன? மனோபாவத்துக்குத் தக்கபடியே பலனிருக்குமென்பதை நம்பு. சாணியைப் பிள்ளையாராய்ப் பிடித்துவைத்துப் பூசை செய்கிறோம். அப்போது பிள்ளையாராகவே பாவிப்பவனுக்கு அந்தச் சாணி பிள்ளையார்தான். சாணியென்று நினைப்பவனுக்கு அது சாணிதான். ஆதலால் மனிதன் நன்மை தீமைகளை அடைவது மனோபாவனையைப் பொருத்ததாயிருக்கிற தென்பதில் நீ இனிச் சிறிதும் சந்தேகப் படாதே! விரைவில் நீ செய்த சபதத்தின்படி இங்கே கோயிலைக் கட்டிமுடி. தாமதியாதே" என்றார்.

மைத்துனன் ஆச்சரியப்பட்டு, "சபதப்படி கோயில் கட்டி முடிக்கிறேன்" என்று கூறிவிட்டு அங்கிருந்து திரும்பினான். சிவபக்தரும் அந்த லிங்கத்தைத் தொழுது துதித்துவிட்டு மைத்துனன் கோயில் கட்



டுகையில் தாமும் தம் சொத்திலிருந்து பெரும்பொருள் செலவழிப்பதாகப் பிரதிக்ஞை செய்துகொண்டார்.

பின் அவர்கள் இருவரும் தங்கள் வியாபாரத்தை முடித்துக்கொண்டு தங்கள் ஊர்போய்ச் சேர்ந்து ஊராருக்கெல்லாம் இவ்வதிசயத்தைக் கூறியவண்ணமிருந்தனர். அவ்வூரிற் பலர் படி சிவலிங்கமான ஸ்தலத்துக்குப் போய்ப் பார்த்துவரத் தொடங்கினார்கள். இப்படியே நாளடைவில் ஏராளமான ஜனங்கள் அங்கே போய்த் தொழத் தொடங்கினார்கள். பின்பு அந்த இடம் புதரின்றிப் பரிசுத்தமான நந்தவனமாக்கப் பட்டது. ஆனால் கோயில் மாத்திரம் கட்டப்படவில்லை. சிவபக்தர் சீக்கிரம் கோயில் கட்டி முடிக்கும்படி தம் மைத்துனனுக்கு அடிக்கடி ஞாபகப்படுத்தி வந்தார். மைத்துனன் "இதோ ஆரம்பிக்கிறேன் அதோ ஆரம்பிக்கிறேன்" எனச் சாக்குச் சொல்லிக் கொண்டே வந்தான். சிவபக்தர் அதனால் அவனிடம் வருத்தங் கொண்டதுமன்றி வாக்குத்தவறியதற்காகத் தெய்வ தண்டனை யேற்படுமே எனப்பயந்தார். அன்றியும் "ஏன் இப்படி நடந்துகொள்கிறாய்? பணமில்லையா? இறைவனுடைய திருவிளையாடல் கண்டும் உனக்கு அவரிடம் உண்மைப்பக்தி யேற்படாத காரணமென்ன?" என்று வற்புறுத்திக் கேட்டார்.

மைத்துனன், "என் மனைவிக்கு அந்த வழியில் செலவு செய்ய விருப்பமில்லை. செலவு செய்தால்

ப்ராணத்யாகம் செய்துகொள்வே னென்றும் கூறு கிறாள். என்ன செய்யட்டும். இது தான் காரணம்!'' என்றான்.

சிவபக்தர்.—சை! அப்படிப்பட்ட குணமுடையவ ளல்லவே அவள்? நான் பார்த்துக் கேட்கட்டுமா?'' என்றார்.

மைத்துனன் 'நீ வரவும் கேட்கவும் தடையேற் படுமா? தாராளமாய்க் கேட்கலாம். வேண்டியதைச் செய்யலாம்' என, சிவபக்தர் மறுநாள் மைத்துன னுடைய வீட்டுக்குப் போய் அவன் மனைவியைக் கண்டு விஷயத்தைச் சொல்லிக் கேட்டார்.

அவள், "ஐயா எனக்குக் கோயில் சம்பந்தமாய்ப் பொருள் செலவழிக்க விருப்பமில்லை'' என்றாள்.

சிவபக்தர்.—சந்தோஷம், இப்படிப் பட்ட எண் ணம் எப்பொழுதுமுதல் உண்டாயிற்று?—என்று கேட்டார்.

அவள்.—இப்பொழுது சிலநாட்களாகத் தான் இந்த எண்ணம்.

சிவபக்தர்.—காரணம்.

அவள்.—காரணமென்ன? அநேக பெரியவர்கள் கோயில் விஷயமாகப் பொருள் செலவழிப்பது வீண் என்று பேசிவருகிறார்களே. அது நியாயமென்று என் மனத்திற்கும் படுகிறது. அதனாலேதான் மறுக்கிறேன்.



சிவபக்தர்.—சரி, உன் புருஷன் சபதஞ் செய்து கொண்டானே அதனை நிறைவேற்றுவது கடமை யல்லவா?

அவள்.—அவர் செய்த சபதம் முழு மூடத்தன மாகையினால் அதனை நான் கடமையாகக் கொள்ள வில்லை—என்றாள்.

சிவபக்தர்.—நல்லது இனி உங்கள் இஷ்டம். நான் போகிறேன்—என்று அவ்விடத்தை விட்டுத் திரும் பினார்.

பின்னர்ச் சிலநாட்கள் கழிந்தன. ஒரு நாள் சிவ பக்தருடைய மைத்துனன் ஆயிரம் ருபாய் பண முடிப்பைத் தன் வீட்டிலேயே எங்கேயோ வைத்து விட்டு வைத்த இடம் தெரியாமல் நெடுகலும் தேடிக் கொண்டிருந்தான். மனைவி "என்ன தேடுகிறீர்கள்?'' என்று பல தடவை கேட்டும் அவன் மறுமொழி கூறாமலிருந்து, பின் அவள் கடிந்து கொண்டதின் பேரில் பதிற் கூறினான். அப்பால் அவளும் பெரு விசனமடைந்து வீட்டில் வைத்த ஆயிரம் ரூபாய் எங்கே போய்விடும் என்ற மயக்கத்துடன் நெடுகலுந் தேடினாள். வெகு நேரந்தேடியும் அது கிடைக்கவில்லை. பிறகு இருவரும் கலக்கமடைந்தார்கள். கோயில் கட் டுவதாகப் பிரதிக்ஞை செய்தோமே அதை நிறை வேற்றாத குற்றமோ என்று கருதிப் புருஷன் கலங்கி மெதுவாய் மனைவியிடம் அந்தக் காரணத்தைத் தெரி வித்தான். அப்பால் அவளும் அந்தக் குற்றமாக இருக்

குமோ என்று எண்ணிக் கலங்கினாள்; என்ன செய்வதென்று தவித்தாள்; சிலரிடம் ஆலோசனை செய்தாள். அவர்கள் தெய்வ கோபந்தான் இது. சந்தேகப்படாதே! முன் பிரார்த்தனையைச் செய்வதாகக் கூறி இந்த ஆயிரம் ரூபாயிலும் ஏதாவது கடவுளுக்குக் கொடுப்பதாகப் பிரார்த்தனை செய்துகொள்” என்றார்கள்.

அப்பால், அவள் வழிக்கு வந்து கடவுளுக்குப் பிரார்த்தனை செய்துகொண்டு கற்பூரங் கொளுத்தினாள். அந்த நிமிஷத்தில் அந்த வீட்டுப் பிள்ளைகளில் பத்து வயதுப் பையனோடி வந்து “அம்மா உங்களையெல்லாம் கதறவடிச்சுவிட்டேன் பார்த்தாயா? பணம் வாசலுட்பக்கம் பீரோவிற் கடியிலே மூட்டையாயிருந்தது. நானெடுத்து ஒளித்துவைத்து இருக்கிறேன். எனக்குச் சொக்காய் வாங்க ரூபா பத்து கொடுத்தால் நான் அதைத் தருகிறேன்” என்று கூறிக் குதித்தான்.

மகனுடைய இப்பேச்சைக் கேட்ட அன்னையும் தந்தையும் அடங்கா மகிழ்ச்சிகொண்டு மகனைக் கட்டியணைத்து முத்தமிட்டு, “அட கண்மணி, உனக்கு ஒரு சொக்காய் என்ன? ஒரு பத்து ரூபா என்ன? நான்கு சொக்காய் தைத்துத் தாரேன். நாலு பத்து ரூபாய் தாரேன். ரூபாயைக் கொடு” என்றார்கள். அவன் “ஏ அப்பா அந்த முடிச்சைத் தூக்கவே முடியவில்லை. அதை அப்படியே ஒரு பக்கத்தில் நகத்தி வைத்திருக்கிறேன். வாருங்கள். வந்து பார்த்து எடுத்துக் கொள்ளுங்கள்” என்றான்.



அவர்கள் பிள்ளையுடன் சென்று அவன் காட்டிய இடத்தில் பண முடிப்பைக் கண்டார்கள்; கண்டதும் எடுத்து அவிழ்த்தார்கள். அவிழ்க்கவே அது நிறையத் தேள் நிரம்பியிருக்கக் கண்டு ஆ! என அலறி எழுந்து என்ன இதுவென வியந்தார்கள். பலர் ஓடிவந்து பார்த்தார்கள். அவர்கள் “இப்போதே தெய்வப் பிரார்த்தனைக்கு முதலிற் பணமெடுத்து ஒருவரிடம் கொடுங்கள்” எனப் புத்திமதி கூறினர். பின் இருவரும் 5,000 ரூபாய் கோயில் கட்டுவதற்கென்று ஒரு பிரபுவிடம் கொடுத்துக் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டார்கள். அப்போதே தேள் வெள்ளி ரூபாவாக மாறியது. எல்லோரும் பயந்தார்கள். அப்பால் அக்கோயிலும் வெகு சிறப்பாகக் கட்டப்பட்டது, எல்லோரும் நாடோறும் ஆலயம் சென்று கடவுளைத் தொழுது இஷ்டார்த்த சித்திகளைப்பெற்றுச் சுகமாயிருந்தார்கள்.

தெய்வ மகிமை இப்படியிருக்கிறது. இதனையறியாத சில மூடர்கள் தெய்வமில்லையெனப் பேசவும் இகழவும் தெய்வமுண்டு என நம்பித் தொழுபவர்களை இழித்துப் பேசியும் வரத்தலைப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு அந்த இறைவன்றான் நல்ல புத்தியைத் தந்து ஆஸ்திகத் தன்மையை அடையும்படி செய்யவேண்டும்.

---

“எங்கெங்கேபார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்
அங்கங்கிருப்பது நீ அன்றோ பராபரமே”.

(தாயுமானவர்.)

# சிறந்த போதனை

தமிழா, தெய்வத்தை நம்பு. பயப்படாதே. உனக்கு நல்ல காலம் வந்துவிட்டது.

உனது ஜாதியிலே உயர்ந்த அறிஞர்கள் பிறந்திருக்கிறார்கள். தெய்வங்கண்ட கவிகள், அற்புதமான சங்கீத வித்வான்கள், கைதேர்ந்த சிற்பர், பல நூல்வல்லார், பல தொழில் வல்லார், பல மணிகள் தோன்றியிருக்கிறார்கள். அச்சமில்லாத தர்மிஷ்டர் பெருகுகின்றனர். உனது ஜாதியிலே தேவர்கள் மனிதராக அவதரித் திருக்கிறார்கள். கண்ணை நன்றாகத் துடைத்துவிட்டு நான்கு பக்கங்களிலும் பார். ஒரு நிலைக்கண்ணாடியிலே போய்ப் பார்.

உனது நாட்டு ஸ்திரீகளிலே பலர் சக்திகணங்களின் அவதாரமாக ஜனித்திருக்கிறார்கள். ஒளி, சக்தி, வலிமை, வீர்யம், கவிதை, அழகு, மகிழ்ச்சி, நலங்களெல்லாம் உன்னைச் சார்கின்றன.

(1) தமிழா, பயப்படாதே, ஊர்தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் போட்டு சாஸ்திரங்களை யெல்லாம் தமிழில் கற்றுக்கொடுக்க ஏற்பாடுசெய்.

(2) ஜாதிவேற்றுமைகளை வளர்த்தாதே. "ஜாதியிரண்டொழிய வேறில்லை" என்ற பழந்தமிழ் வாக்கியத்தை வேதமாகக் கொள்.



(3) பெண்ணை அடிமையென்று கருதாதே. முற்காலத்துத் தமிழர் மனைவியை "வாழ்க்கைத் துணை" என்றனர். ஆத்மாவும் சக்தியும் ஒன்று.

(4) வேதங்களை நம்பு. அவற்றின் பொருள் தெரிந்துகொண்டு பின் நம்பு. புராணங்களைக் கேட்டுப் பயனடைந்து கொள். புராணங்களை வேதங்களாக நினைத்து மடமைகள் பேசி, விலங்குகள் போல நடந்து கொள்ளாதே.

(5) தமிழா, உனது வேலைகள் அனைத்திலுமே பொய்க் கதைகள் மிதமிஞ்சி விட்டன. உனது மதக் கொள்கைகள், லௌகிகக் கொள்கைகள், வைதிக நடை, லௌகிக நடை, எல்லாவற்றிலுமே பொய்கள் புகுந்து தலைதூக்கி ஆட நீ இடங்கொடுத்துவிட்டாய்! இவற்றை நீக்கி விடு. வீட்டிலும், வெளியிலும் தனிமையிலும, கூட்டத்திலும, எதிலும், எப்போதும் நேர்மையிருக்க வேண்டும; உண்மை யிருக்கவேண்டும் நீயும் பிறரை வஞ்சிக்கலாகாது, பிறரும் உன்னை வஞ்சிக்கலாகாது, பிறர் பிறரை வஞ்சிப்பதையும் நீ இயன்றவரை தடுக்க வேண்டும். எல்லாப் பேறுகளைக் காட்டிலும் உண்மைப் பேறுதான் பெருமை கொண்டது. உண்மை தவங்களுக் கெல்லாம் உயிர். உண்மை சாஸ்திரங்களுக் கெல்லாம் வேர். உண்மை இன்பத்திற்கு நல்லுறுதி. உண்மை பரமாத்மாவின் கண்ணாடி. ஆதலால் தமிழா, எல்லாச் செய்திகளிலும் உண்மை நிலவும்படி செய்.

(6) தமிழா, எழுதிப் படிப்பதெல்லாம் மெய்யுமில்லை. எதிர் நின்று கேட்பதெல்லாம் பொய்யுமில்லை. முந்திய சாஸ்திரந்தான் மெய். பிந்தியசாஸ்திரம் பொய்—என்று தீர்மானம் செய்துகொள்ளாதே, காலத்துக்கும் உண்மைக்கும் எதிரிடையாக ஒரு கணக்கு ஏற்பட்டிருக்கிறதா? "தகப்பன் வெட்டிய கிணறென்று சொல்லி மூடர்கள் உப்பு நீரைக் குடிக்கிறார்கள்," என்று பஞ்சதந்திரம் நகைக்கிறது.

(7) இவ்வுலகத்தில் நான்கு புருஷார்த்தங்கள் என்று நமது பெரியோர்கள் காட்டி அருள் புரிந்திருக்கிறார்கள்.

அவை:—அறம், பொருள், இன்பம், வீடு என்பன.

(1) இவற்றுள் அறமாவது கடமை. அது உனக்கும், உனது சுற்றத்தார்க்கும், பிறர்க்கும் நீ செலுத்த வேண்டிய கடமை. "பிறர்" என்பதனுள் வையக முழுதும் அடங்கும். கடமையில் தவறலாகாது. தொழில்களெல்லாம் நற்பயன் தருமிடத்து அறங்களாகும்.

(2) பொருள் என்பது செல்வம். நிலமும், பொன்னும், கலையும் புகழும் நிறைந்திருத்தல், நல்ல மக்களைப் பெறுதல், இனப்பெருமை சேர்தல், இவையெல்லாம் செல்வம். இச்செல்வத்தைச் சேர்த்தல் மனித உயிர்க்கு ஈசன் இட்டிருக்கும் இரண்டாங் கட்டளை.

(3) இன்பம் என்பது இனிய பொருள்களுடன் உயிர் கலந்து நிற்பது. பெண், பாட்டு, கூத்து, மது முதலிய ரஸவஸ்துக்களை அநுபவிப்பது. இவ்வின்



பங்களெல்லாம், தமிழா, உனக்கு நன்றாக அமையும்படி பராசக்தி அருள் புரிக. உன்னுடைய நோய்களெல்லாம் தீர்க. உனது வறுமை தொலைக! உனக்கு இனிமையும் அழகுமுடைய வஸ்துக்களெல்லாம் வசப்படுக! பஞ்ச பூதங்களும் உனக்கு வசப்படுக. நீ எப்பொழுதும் இன்பமெய்துக.

(4) வீடாவது பரமாத்மாவுடன் அறிவு கலந்து நிற்பது. "வீடு" என்ற சொல்லுக்கு "விடுதலை" என்பது பொருள். மேற் கூறப்பட்ட மூன்று புருஷார்த்தங்களிலும் ஈடேறிய பெரியோருக்கு ஈசன் தானாகவே வீட்டுநிலை அருள் செய்வான். தமிழா, உனக்குப் புருஷார்த்தங்கள் கைகூடுக!

C. S. பாரதி.

---

வட திருவிதாங்கூரில் அணைக்கரை என்னுமிடத்தில் 140 வயதுள்ள ஒரு கிழவன் இருக்கிறான். இவன் பெயர் இயேசுதாசன். முன் 1809 வருஷமுதல் 1819 வருஷம்வரை திருவிதாங்கூர் கொச்சி சமஸ்தானத்தில் பிரிட்டிஷ் பிரதிநிதியாக இருந்த கர்னல் மன்றோவை இவனுக்கு நன்றாய்த் தெரியுமாம். மலையாள எல்லையை நிர்ணயிப்பதற்காகக் காடுகளை வெட்டிக்கொண்டிருந்த காலத்தில் இக்கிழவன் ஒரு கூலியாக வேலை செய்தானாம். இவன் 80 வயதுவரை இந்துவாகவிருந்து பின் கிறிஸ்தவமதத்தில் சேர்ந்தானாம். இவன் 50 வயதில் கலியாணம்செய்துகொண்டு இவனுக்கு நான்கு குழந்தைகளும் பிறந்திருக்கின்றனவாம். இவனுடைய மனைவியும் குழந்தைகளும் இப்பொழுதும் உயிருடன் இருக்கிறார்களாம். இவன் மனைவிக்கு இப்பொழுது வயது 110. இவர்கள்தான் தற்காலத்தில் தீர்க்காயுளுள்ள தம்பதியாம். (இந்துநேசன்.)

## கௌரவர் சொன்னபடி பாண்டவர் வாரணா வதம் சென்றபோது விதுரர் அவர்களுக்குச் சொன்ன ஒன்பது யுக்திகள்

பகைவரின் கருத்தை வகைபடத் தெரிந்தவன்
பின்னுறும விபத்தைத் தன்னரும் பலத்தால்
ஞாயமாய்ப் போக்கும் உபாயம்நா டுதல்நலம்
ஆயுதம் பயின்று நேயமாய் நின்று
விடுக்கவும் விட்டவை தடுக்கவும் கூர்ந்த
யுக்தி யறிந்த சக்தியுள் ளவனை
வல்ல பகைவர் வெல்லமாட் டார்கள். (1)
விரிந்த காட்டை எரிந்திடச் சுட்டு
மாய்க்கும் நெருப்பு வளைக்குள் ளிருக்கும்
எலியைச சுடாதென் றினிது தெரிந்து
தன்னைக் காப்பவன் சாகா தவனும் (2)
வழியையும் திக்கையும் விழியிலான் அறியான் (3)
ஊக்கமில் லாதவன் ஆக்கமில் லாதவன் (4)
பகைவரால் விடப்படும் படைகளை அறிஞன்
அவரையே நாடி அடையத் திரும்புவான் (5)
தகுஞ்சுரங் கத்துள் புகுந்தொளிந் திருந்து
கப்புமா பத்தில் தப்பிப் பிழைக்கும்
உள்ளங் களித்தே முன்னம் பற்றி (6)
நடப்பவன் வழியை நன்கு யறிவான் (7)
நட்சத் திரங்களால் நான்குதிக் குணர்வான் (8)
புலனை யடக்கும் நலனைக் கண்டவன்
கெடமாட் டான் துன்பப் படமாட்டானே (9 )
இவ்வகை விதுரர் செவ்வி தினுரைத்ததை
யாதென அன்பாய் நீதனுந் தருமனைக்



குந்தி கேட்க வந்தித் தன்னையைக்
கொடுநெருப் புடனே படுவிஷமென்னும்
இவற்றி னின்றும் கவற்சி யின்றித்
தன்னை ஒருவன் அன்னையே காத்தல்
தகுதி; மறறும் சார்ந்தநட் சத்திரம்
கொண்டு வழியைக் கண்டு நடப்பது
நன்று சுவர்களை நின்றுகவ னிக்க
வேண்டு மென்றும் விளம்பினர் விதுரர்
என்றனன் தருமன் நன்றெனள் அன்னை. A.S.B.

---

## கலிகாலக் கொடுமை

தாய்புத்தி சொன்னால் மறுத்திடும் காலமுயர்
    தந்தையைச் சீறுங்காலஞ்
சற்குருவை நிந்தைசெய் காலமெய்க் கடவுளைச்
    சற்றுமெண் ணாதகாலம்
பேய்த்தெய்வ மென்றுபச ரித்திடும் காலம்
    புரட்டருக் கேற்றகாலம்
பெண்டாட்டி வையினும் கேட்கின்ற காலநற்
    பெரியர்சொல் கேளாதகாலம்
தேய்வுடன் பெரியவன் சிறுமையுறு காலமிகு
    சிறியவன் பெருகுகாலம்
செருவில்விட் டோடினோர் வரிசைபெறு காலம்வசை
    செப்புவோர்க் குதவுகாலம்
வாய்மதம் பேசிவிடு மரியாயக் காரர்க்கு
    வாய்த்தகலி காலமையா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
    மலைமேவு குமரேசனே. (குமரேச சதகம்)

210775

# சிக்கன வழக்கம்

அநேக ஜனங்கள் தங்கள் குடும்பத்துக்கு வேண்டிய பொருளை ஸம்பாதித்துக் கொண்டு ஸௌக்கியத்தில் இருக்கலாம். ஆனால் இந்த நிலைமையை அடைவதற்கு தக்க முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். கூலிவேலை செய்பவர்களுங்கூட முதலாளிகளாகி இதர ஜனங்களையும் விருத்திக்குக் கொண்டுவரலாம். ஆனால் இவ்வித மேல்பதவியை அடைவதற்கு உழைப்பும், முயற்சியும், ஸத்தியமும், சிக்கனமும் அவச்யமாய் இருக்கவேண்டும்.

தற்காலம் ஜனங்கள் கஷ்டப்படுகிறது பணமில்லாததால் அல்ல; குணமில்லாததால்தான் கஷ்டப்படுகிறார்கள். பணமிருந்தும் பணத்தை வீண் செலவிடுவதால் தான் கஷ்டப்படுகிறார்கள். பணம் சம்பாதிப்பது சுளுவு; ஆனால் சம்பாதித்த பணத்தை க்ரமமாய் செலவிடும் வழியை அறிவது தான் கஷ்டம். ஒரு மனிதன் சம்பாதிப்பதெல்லாம் அவன் ஆஸ்தியாகமாட்டாது; அவன் சம்பாதித்த பொருளை செட்டும் கட்டுமாயிருந்து சேமிக்கும் உபாயம் தான் அவன் ஆஸ்தியாகும். எவன் தன் உழைப்பினால் தனக்கும் தன் குடும்பத்துக்கும் போதுமானதைவிட அதிகம் சம்பாதிக்கும்போது, பிற்காலத்தில் உதவும்படி கொஞ்சம் கொஞ்சமாக மிச்சம் பிடித்து ஸ்வல்ப ஆஸ்தி சேர்த்து வருகிறானோ,



அவன் தான் குடும்ப ஸௌக்கியத்தின் ரகஸ்யத்தை அறிந்தவனாவான். அவன் சேமித்த பொருள் ஸ்வல்பமாக இருந்தாலும், அவன் ஸ்வாதந்தரியமாய் ஜீவிப்பதற்குப் போதுமானதாகும். உயர்ந்த கூலிவாங்கும் வேலைக்காரர்கள் தங்கள் கூலியில் கொஞ்சம் கொஞ்சமாக மிச்சம்பிடித்து பிற்காலத்துக்கு உதவும்படியாக ஏன் முதல் சேர்த்துக் கொள்ளக் கூடாது? இதற்கு மனம் போனபடி விடாமல், தன்னடக்கமும் சிக்கனமும் தான் வேண்டியவை. உண்மையில் இப்பொழுது கைத்தொழில் சாலைகளில் முதலாளிகளாக இருப்பவர்கள் அநேகமாய்க் கீழ்ப்படியிலிருந்து வந்தவர்களே தான். அனுபோக ஞானமும் திறமையுமுள்ள வேலைக்காரர்கள் முதலாளிகளாக உயருகிறார்கள். இவையில்லாத வேலைக்காரர்கள், கூலிவேலைக்காரர்களாகக் கீழ்ப்படியிலேயே கிடக்கிறார்கள். இவர்களுக்குள் வித்யாஸம் இதுதான். சம்பாத்யத்தில் மிச்சம் பிடித்து முதல் சேர்ப்பதும் வேலைக்காரன்தான். சம்பாத்யத்தை பூராவும் வீணாக்கிக் கொண்டு பிறகு திண்டாடுவதும் வேலைக்காரன் தான். அவன் சேமித்து வைத்துக்கொண்டால், சமயங்களில் அவனுக்கு உபயோகமாகும்.

காப்டன் துரை (Cobden) தன் ஊராருக்கு ஒரு கதை சொன்னார். "நான் லங்காஸ்டர் பட்டணத்துக்குப் போனகாலத்தில் நானும் இன்னும் சில கனவான்களும் ஒரு பஞ்சு ஆலையைப் பார்க்கப் போனோம். அந்த ஆலைக்குச் சொந்தக்காரன் ஒருவன். அவன் பெயர்

சொல்லமாட்டேன். அவனை ஸ்மித் துரையென்று கூப்பிடுவோம். சுமார் 300-400 வேலைக்காரர்கள் அதில் வேலைசெய்து வந்தார்கள். ஒரு கட்டிடத்தில் சுமார் 700-விசைத்தறிகள் இருந்தன. நாங்கள் திரும்பி வருகையில் என் சிநேகிதர்களில் ஒருவர் ஆலையின் சொந்தக்காரனைத் தோளில் தட்டிக்கொடுத்துச் சொன்னதாவது 'ஸ்மித் துரை 25 வருஷத்துக்கு முன் கூலி வேலைக்காரனாக உழைத்தவர்தான். இவ்வளவு பாக்கியத்துக்கும் காரணம் இவருடைய முயற்சியும் சிக்கனமுந்தான். இதற்கு ஸ்மித் துரை கபடமின்றி உடனே பதில் சொன்னதாவது 'அப்படியல்ல, இவ்வளவு பாக்கியத்துக்கும் நானே பூராவும் காரணமல்ல; ஆஸ்தியுடைய ஒரு மனைவியை மணம்புரிந்தேன்; எவ்வளவு ஆஸ்தியென்றாலோ, அவள் என்னை மணம்புரிந்தபோது அவளும் விசைத் தறியில் வாரம் ஒன்றுக்கு 9½-ஷில்லிங் (7 ரூபா) சம்பாதித்து வந்தாள்."

3. காலத்தை வீணாக்காமல் சேமிப்பதும் பணத்தை வீணாக்காமல் சேமிப்பதும் சமமே "காலம்தான் கனகம்" பணம் சம்பாதிப்பதற்குக் காலத்தைக் கிரமமாய் உபயோகிக்கவேண்டும். பல நற்செய்கைகளினும் காலத்தை செலுத்தலாம். வித்தையிலும், படிப்பிலும் கலைகளிலும், சாஸ்திரங்களிலும், காவ்யங்களிலும் காலத்தைச் செலவழிக்கலாம். முன் ஏற்பாட்டினால், காலத்தை வீணாக்காமல் சிக்கனப்படுத்தலாம். அந்தந்தக் காலத்தில் அந்தந்தக் காரியங்களைச் செய்யவேண்டு



மென்று செய்யவேண்டிய காரியங்களைக் கிரமமாய்ப் பிரித்து வேலைசெய்தால் காலம் வீணாகமாட்டாது. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு இடம் வேண்டும்; ஒவ்வொன்றும் அந்தந்த இடத்தில் இருக்கவேண்டும். அப்படியே ஒவ்வொரு கார்யத்துக்கும் ஒருகாலம் நியமிக்கவேண்டும். ஒவ்வொரு கார்யமும் குறித்த காலத்தில் செய்யவேண்டும்.

4. சிக்கனமாயிருப்பது நலமென்பதை ரூபிக்கவேண்டியதில்லை. சிக்கனமாக இருக்கலாம் என்பதையும் எவரும் மறுக்கவில்லை. அநேக திருஷ்டாந்தங்களை நாம் கண்முன் பார்த்து வருகிறோம். பலபேர் செய்திருப்பதை மற்றவர்களும் ஏன் செய்வதுகூடாது? மேலும் சிக்கனமாயிருப்பது கஷ்டமானதுமல்ல. அதல்லாமலும் சிக்கனமாயிருத்தலால் மனுஷனுக்குத் துன்பமும் அவமானமும் நேரிடா. சிக்கனமாயிருப்பவன் தன் மனம் போனபடி செலவிடாமல் தன்னைத்தான் அடக்கிக் கொள்ளப்பழகவேண்டும். ஆனால் சிக்கனமாயிருப்யவன் நியாயமான சுகத்தை அனுபவிப்பதில் யாதொரு தடையுமில்லை. ஊதாரித்தனத்தால் அடையக்கூடாத அநேக நியாயமான சுகங்களைச் சிக்கனத்தால் நாம் அடையலாம்.

5. சிக்கனப்படுத்த முடியாதென்று எவனும் சொல்லவேண்டாம். மாசம் ஒன்றுக்குக் கொஞ்சம் பணமாவது மிச்சம் பிடிக்கக்கூடாதவர்கள் எங்கும் காணோம். மாசம் ஒன்றுக்கு 3 ரூபா மிச்சம் பிடித்து

வந்தால் 20-வருஷத்தில் வட்டி சேர்ந்து குறைந்த பக்ஷம் சுமார் 1,000 ரூபாயாகும். இன்னும் 10 வருஷத்தில் வட்டி சேர்ந்து 1,500 ரூபாய்க்குமேல் ஆகக்கூடும். மாசம் ஒன்றுக்கு அவ்வளவு பணம் மிச்சம்பிடிக்கமுடியாதென்று சிலர் சொல்லக்கூடும். சரிதான்; அப்படியானால் 2 ரூபாயாவது மிச்சம்பிடி; இதுவும் சாத்தியமில்லாவிட்டால், ஒரு ரூபாயாவது மிச்சம்பிடி; அல்லது அரை ரூபாயாவது மிச்சம்பிடி; எப்படியாவது எவ்வளவு சிறு தொகையாவது மிச்சம்பிடிக்க ஆரம்பிக்கவேண்டும். சேம நிதியில் (சேவிங்ஸ் பாங்கி) மாசம் ஒன்றுக்கு ஒரு ரூபா போட்டுவந்தால், இது 20 வருஷத்தில் 300 ரூபாயாகும். 30 வருஷத்தில் 500 ரூபாயாகும். சிக்கனகுணத்தையும் தன் அடக்கத்தையும் பழக்கவேண்டியதுதான் முக்கியம்.

6. சிக்கனமாயிருப்பதற்கு விசேஷ தைரியம் தேவையில்லை. விசேஷ புத்தியும் தேவையில்லை; விசேஷகுண சம்பத்தும் தேவையில்லை. சாதாரண புத்தியும் இந்திரிய சுகங்களை நீக்க சக்தியும் மாத்திரம் இருந்தால் போதுமானது. உண்மையில் நாம் பிரதிதினம் செய்யும் காரியங்களை விவேகமாய்ச் செய்வதுதான் சிக்கனம். சிக்கனத்துக்குத் தீவிரமான தீர்மானம் தேவையில்லை. கொஞ்சம் பொறுமையும் தன் அடக்கமும் தான் தேவை. சிக்கன குணம் படிவதற்கு முதல்படி சிக்கனத்தைத் துவக்கவேண்டும். சிக்கனத்தைப் பழக்கப் பழக்க சிக்கனமாயிருப்பது சுலபமாகும். சிக்கனப் பயிற்சியால் தான்பட்ட ஸ்வல்ப கஷ்டத்துக்கு சீக்கிரத்தில் தக்க கைம்மாறு பெறுகிறான்.



7. சிலர் இந்தக் கேள்வியைக் கேட்கலாம். ஸ்வல்ப கூலிக்கு வேலை செய்கிறவனுக்குத் தான் சம்பாதிக்கும் ஒவ்வொரு பைசாவும் தன் குடும்ப ஸம்ரக்ஷணைக்குத் தேவையாயிருக்கும்போது அவன் எவ்விதம் பணம் மிச்சம்பிடித்து சேமநிதியில் போடுகிறது? ஆனால் உழைப்பும் சாராய வெறுப்புமுள்ள அநேக கூலிக்காரர்கள் இவ்வண்ணம் தங்கள் இந்திரிய சுகங்களை விலக்கி ஸ்வல்ப சம்பாத்யத்தில் ஸ்வல்பமாக மிச்சம்பிடித்து சேமநிதிகளில் போட்டுவருவதை நாம் கண்ணாறப் பார்த்து வருகிறோம். இப்படிச் செய்வது சிலருக்குச் சாத்யமாயிருந்தால், அதே நிலைமையிலுள்ள மற்றவர்களும் ஏன் இவ்வண்ணம் செய்யமுடியாது? அவர்களுடைய சௌக்கியத்துக்கு ஒருவிதக் குறைவின்றி இப்படிச் செய்துகொள்ளலாம்.

8. நல்ல சம்பளம் பெறும் ஒருவன் தன் சம்பாத்யம் பூராவையும் தனக்கே செலவிட்டாலும், அல்லது அவன் குடும்பத் தலைவனாக விருந்தால் மாசமாசம் மிச்சம் சேர்க்காமல் சம்பாத்யம் பூராவும் செலவிட்டாலும், அவன் எவ்வளவு இரக்கமற்ற பாவியாக யிருக்க வேண்டும்? நல்ல சம்பளத்தி லிருந்தவர்கள் தங்கள் பெண்சாதி பிள்ளைகளுக்கு ஒன்றும் வைக்காமல் அவர்களை நிர்க்கதியாக விட்டுவிட்டுத் திடீரென்று இறந்துவிட்டதாகக் கேள்விப் படுகிறோமல்லவா? இப்படிப்பட்டவர்களை நாம் இரக்கமற்ற மகா ஊதாரிகள் என்றே

சொல்லவேண்டும். இப்படி அநேகம் நடக்கின்றன. ஆனால் ஜனங்கள் இவ்விஷயங்களை அவ்வளவாக ஆலோசித்துப் பார்க்கிறதில்லை. இப்படித் திக்கற்றுப் போனவர்கள் பிச்சைக்குப் புறப்படுகிறார்கள்; கொஞ்சம் பணம் கிடைத்தாலும் கிடைக்கும்; ஒன்றுமில்லாமல் போனாலும் போகும். இறந்துபோனவர்களின் குடும்பத்தார்கள் வறுமையில் முழுகிப் போகிறார்கள்.

9. ஆனால் கொஞ்சம் முன்ஜாக்கிரதை யிருக்கும் பக்ஷத்தில் அநேகமாய் இவ்விதக் கேடு வந்திராது. இந்திரிய சுகங்களில் எதையாவது ஒன்றை நிறுத்தினாலும், அதாவது சாராயத்தில் ஒரு கோப்பை அளவையாவது, சுருட்டில் ஒரு சுருளையாவது நிறுத்தினாலும், இதில் கூடிவரும் பணம் சில வருஷத்தில் ஒரு முதலாகிக் குடும்பத்துக்கு உதவியாகும். ஒவ்வொருவனுக்கும், வியாதியும் கஷ்டமும் கொஞ்சமேனும் எதிர்பாராத காலத்தில் திடீரென்று நேரிடுவதால், மிக எளியவன் கூடத் தனக்கும் தன் குடும்பத்துக்கும் கஷ்டகாலத்தில் உதவும்படி முந்தியே தன் சம்பாத்யத்தில் கொஞ்சம் கொஞ்சமாக மிச்சம்பிடித்துச் சேர்த்துவைக்கக் கடமைப் பட்டிருக்கிறான்.

10. ஆகிலும் சிலபேர்கள் தாங்கள் பணக்காரர்களாக ஆகக்கூடும். ஆனால் அநேகம்பேர்கள் தங்கள் உழைப்பாலும் சிக்கனத்தாலும் தங்கள் குடும்ப சௌக்கியத்துக்குப் போதுமானதைச் சேர்த்துக் கொள்ள சக்தியுடையவர்களே. மூப்பு காலத்தில் வறுமையின்றிப் பிழைப்பதற்குக் கூடப் போதுமான பொருளை அவர்கள் சம்பாதித்துக் கொள்ளலாம். சிக்கனத்துக்கு இடையூறாக நிற்பது சம்பாதனைக் குறைவல்ல; மனோதைரியத்தின் குறைவுதான். அநேகம் பேர்கள் கையாலும் மூளையாலும் இடைவிடாமல் உழைக்கிறார்கள். ஆனால் சம்பா



தித்த பொருளை தாறுமாறாய்ச் செலவிடாமலும் அந்தஸ்துக்கு மீறிவாழாமலும் செட்டும் கட்டுமாயிருக்கப் போதுமான மனோதைரியமில்லாமல் இருக்கிறார்கள்.

11. பெரும்பான்மையோர், விஷய சுகத்தை வெறுத்துத் தன்னடக்கம் பழகாமல் தற்கால விஷய சுகத்தையே தேடுகிறார்கள். பாமர ஜனங்களுக்கு விஷய சுகமே பிரதானம். அநேகமாய் அவர்கள் சம்பாதனைப் பூராவையும் அதிலே செலழித்து விடுகிறார்கள். ஆனால் இப்படி ஊதாரிகளாயிருப்பது கூலிவேலைக்காரர்கள் மாத்திரமல்ல. அநேக வருஷமாக நூற்றுக்கணக்காகச் சம்பாதித்துச் செலவிட்டு வந்தவர்களும் தங்கள் குடும்பத்தை நிராதரவாக விட்டுவிட்டுத் திடீரென்று இறந்துபோய்விட்டதாக நாம் பல தடவைகளில் கேட்டிருக்கிறோம். இது ஒவ்வொருவருக்கும் நேரில் தெரிந்த விஷயமே. அவர்கள் மரணகாலத்தில் குடியிருந்த வீட்டிலுள்ள சாமான்களோ பிறருக்குச் சொந்தமாயிருந்தன. இவர்களுடைய இழிவான காரியங்களுக்கும் இவர்களின் ஊதாரிக் குடித்தனத்தில் பட்ட கடனுக்கும் இந்தச் சாமான்களை விற்றுக் கொடுக்கும்படி நேரிடுகிறது.

12. பணத்தால் பெறக்கூடிய அநேக பொருள்கள் உண்மையில் உபயோகமற்றனவா யிருந்தும், பணத்தில் ஒரு விசேஷப் பெருங்குணம் அமைந்திருக்கிறது. அதாவது பணமிருப்பவன் பிறர் கையைப் பார்க்காமல் ஸ்வாதந்திரியமாய் ஜீவிக்கலாம். ஆகையினாலேதான் பொருள் சேர்ப்பது ஒரு முக்கியமான விஷயமாகிறது.

(ஜனாபிமானி).

# ஐயூப்

உலகம் புகழ்ந்து பேசத்தக்க வளம் பல உடைய வட அறபியாவில், பலஸ்தீனா என்றொரு தேசமுண்டு. அந்தத் தேசத்தில் புசரா என்னும் பெயர் கொண்ட ஒரு நகரமுண்டு. அந்நகரம், 'இந்நகரம் பலஸ்தீனாவுக்கு ஒரு நடுநாயகம்' என்று கண்டவர் எவரும் வியந்து கொண்டாடத் தக்கபடி வசதிகள் பலவும் அமைந்தது; புண்ணிய சீலர்கள் வசிக்கும் கண்ணியம் வாய்ந்தது; புலவர் போற்றும் பிரபலமுடையது; வர்த்தகத்திற்கேற்ற வளமை மிக்கது.

றசூல் அதிபரான முஹம்மத்நபி யவர்கள் பாலியத் தன்மையில், திருமக்கா நகரிலிருந்து தம்முடைய சிறிய தந்தையாருடன் சீரியா (பாலஸ்தீன்) தேசத்துக்கு யாத்திரை போனார். அவ்வாறு போகையில் அந்த நபி புஸரா நகரில் தங்கிச் செல்ல நேரிட்டது. மகா புண்ணிய புருஷராகிய முஹம்மத் நபியவர்களின் பாதஸ்பரிசம் பட்ட திருநகரமாதலால் புஸரா புண்ணிய பூமியாக விளங்குகிறது.

இந்தப் புண்ணிய பூமியிலேதான் ஐயூப் என்னும் பெயர்கொண்ட நபியவர்கள் அவதரித்தார். உலகஞ் செய்த தவமே உருக்கொண்டதென்று வியந்து பேசத் தக்கபடி விளங்கிய ஐயூப் நபியவர்களின் தந்தை



யார் அமூஸ். அன்னையாரின் பெயர் தெரியவில்லை. ஆனால் அந்த அம்மையார் லூத்நபி யவர்களின் சந்ததியைச் சார்ந்தவர் என்பது மாத்திரம் ஆராய்ச்சியில் தெரிய வருகிறது.

ஆமூஸ் என்பவர் ஈஸின் என்பவரின் பௌத்திரர். ஈஸின் இப்ராஹீம் நபியவர்களின் பௌத்திரர். இப்ராஹீம் பரிசுத்தநபி மஹாசமூகங்களின் மூலபிதா. அறநெறி தவறாதொழுகிய சாது; ஸன்மார்க்கத்தை உலகத்திற்குத் தம்முடைய நடக்கையிலேயே காட்ட அவதரித்த உத்தம புருஷர்.

ஐயூப்நபி என்பவர் இத்தகைய பெருமைவாய்ந்த இப்ராஹீம்நபி யவர்களின் வம்சத்தில் உற்பவித்த உத்தமகுண சீலராகையினால்,

"தக்கார் தகவிலர் என்பதவரவர்
எச்சத்தாற் காணப் படும்."

என்று திருவாய் மலர்ந்தருளிய திருவள்ளுவ நாயனாரின் திருவாக்கிற்கிணங்கத் தமது மூதாதையரின் பெருமையைத் தமது ஒழுக்கத்தில் உலகத்திற்கு விளக்கியருளினார்.

குலத்தளவே யாகுமாம் குணம் என்று வழங்கும் பழமொழி இவருடைய சரித்திரங் கண்டபிறகுதான் உலகத்தில் ஏற்பட்டதோவென்று மதியூகிகள் எண்ணி மகிழும்படி, நபியவர்கள் சகலநடவடிக்கைகளிலும் மேலான நிலைமையை அடைந்திருந்தார்.

"காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூங் கில்லை உயிர்க்கு—."

என்னும் உயர்ந்த நீதியை உணரவல்ல நிபுணத்வம் நிறைந்திருந்தபடியால், ஐயூப்நபி அடக்கத்தையே தமக்குச் சிறந்த அணிகலனாகக் கொண்டிருந்தார். அவரைத் தரிசிக்கும் எவனும் "அடங்கி நல்வழியில் நடந்துகொள் புவியில்" என்னும் போதனையை எண்ணாமலிரான். அவருடைய திருவுருவமே அத்தகைய அரிய போதனையை ஊட்டும்.

இவ்வாறு அடக்கத்தையே தமக்கு அணிகலனாகக் கொண்ட ஐயூப்நபியவர்கள் கல்வி கேள்விகளிலே பெரியவராகவும் ஆஸ்திகசிரோமணியாகவும் ஆசாரசீலராகவும் விளங்கினார்.

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்"—என்றும்

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பைத் தரும்."

என்றும் பெரியார் திருவாக்குகள் வெளிவந்திருக்கின்றன. ஆதலால் சிறந்த மேதாவியென்றும் தருமகுணசீலரென்றும் தவமதிச் செல்வரென்றும் விளங்குகிறவர்கள் சகல நல்ல குணங்களுக்கும் இருப்பிடமாயிருப்பர். அதனாலேதான் அவர்கள் பெருமையடைவது.

இது நிற்க; ஐயூப் நபியவர்களின் பிறப்பு வளர்ப்பைப் பற்றிய காலவரையறையைக் குறித்து உலக சரித்



திரங்களில் ஒரு சிறுவிவரமும் தெரியவில்லை. ஆயினும் தற்காலத்திலே வெளிவந்துள்ள தௌறாத் ஆகம ஆராய்ச்சியிலே தேர்ந்த நியுணர்கள் இவருடைய காலம் கி. பி. 700 முதல் 1000-த்திற்குள் என்று திட்டப் படுத்தலாமென அபிப்பிராயப் படுகின்றனர்.

ஐயூப் என்னும் இவருடைய பெயரைப்பற்றி ஒரு சமயம் முஸ்லீம் சரித்திரநிபுணர்களுக்குள் ஒரு விவாதம் ஏற்பட்டது. முஸ்லீம் சரித்திராசிரிய நிபுணர்களிலே மிகப்புராதனரும் பண்டைக்காலச் சரித்திரி ஆராய்ச்சியிலே தேர்ந்தவரும் அப்ரானீய பாஷையில் ஓளப் அல்லது யோபாப் யோப் என்னும் உச்சரிப்புடன் பதிவிற்கு வந்திருக்கும் மாற்றுப்பெயர்களும் ஐயூப் என்னும் திருநாமத்தையே குறிப்பனவாகும் என்று தீர்மானத்துக்கு வந்திருக்கின்றனர். தற்கால சாஸ்திரிகளெல்லாரும் ஐயூப் என்பதே இவர்தம் திருநாமம் என்று முடிவான தீர்மானத்திற்கு வந்திருக்கின்றனர்.

இதனையன்றித் தெய்வத் தன்மைவாய்ந்த திருக்குறு ஆன் என்னும் வேதமும் இந்த மகானை ஐயூப் என்னும் பெயராலே அழைத்து வருகின்றது. திருக்குறு ஆன் என்னும் வேதம் புகழும் பெருமை வாய்ந்தது இந்த நபியின் திருச்சரித்திரம்.

இவ்வாறு பெரியாரும் பெரியார் போற்றும் வேதமும் ஐயூப் என்கிற நாமமே இவர்க்குரியதென்று பேசு

இறபடியால் ஔப், யோபாப் என ஆண்டுவரும் பெயர்களெல்லாம் ஐயூப் என்னும் திருநாமத்தின் திரபென்றே கொள்க.

ஐயூப்நபியவர்களின் தந்தையார் ஏராளமான செல்வமும் பேரும் புகழும் வாய்க்கப்பெற்ற ஒரு பெரிய பிரபு. புஸரா நகரத்திலல்லாமல் சிரியா தேசத்திலும் இவரை மிஞ்சிய தனவந்தர் எவருமில்லை என்று எவரும் பேசுவர்.

இவ்வாறு திரண்டசெல்வம் படைத்தவராகிய அவரிடம்—

“பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு”

என்னும் பெரியார் திருவாக்கிற்கிணங்க அடக்கம் என்னும் அரியகுணம் அமைந்திருந்தது. அன்றியும் பரம ஆஸ்திகசிரோமணியாகவும் ஏழைக்கிரங்கி இன்னருள் புரியும் தருமபிரபுவாகவும் நடுநிலைமை தவறாதவராகவும் விளங்கினார்.

“செப்ப முடையவ னாக்கம் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப் புடைத்து”

என்று நாயனார் கூறியுள்ளபடி தந்தையாருடைய செல்வமெல்லாம் பரமபக்த சிரோமணியாகிய மகனா ஐயூப் நபியவர்களுக்கே கிடைத்தன.

ஐயூப் நபியவர்களுக்குச் சொந்தமான நன்செய், புனசெய் நிலங்கள் அளவிறந்தனவாகும். அவ்வாறே



கனிதரும் தருக்களடர்ந்த பொழில்களும், மலர் தரும் பூஞ்செடிகளடர்ந்த நந்தவனங்களும் அளவிறந்தனவாகக் கிடைத்தன. இவையல்லாமல் ஆயிரம் ஆண்குதிரைகளும், ஆயிரம் பெண் குதிரைகளும், ஆயிரம் கோவேறு கழுதைகளும், ஆயிரம் பெண் கழுதைகளும், மூவாயிரம் ஆண் ஒட்டகங்களும், ஐயாயிரம் பெண் ஒட்டகங்களும், ஆயிரம் எருதுகளும், ஆயிரம் பசுக்களும், ஐந்நூறு உழவு மாடுகளும், பதினாயிரம் ஆடுகளும், நமது நபி அவர்களுக்குக் கிடைத்தன. இந்தக் கால்நடைகளை யெல்லாம் மேய்ப்பதற்கு ஐந்நூறு வேலையாட்களும் வேறுபல வேலைகளுக்குரிய பணிவிடைக்காரர்கள் அநேகரும் கிடைத்தனர்.

இவ்வாறு அளவிறந்த செல்வத்தை அடைந்தவராகிய ஐயூப் நபியவர்கள், “நான் பணக்காரன்!” என்கிற ஆணவங் கொள்ளாமல், “என்பா லமைந்த இந்தச் செல்வமெல்லாம் ஆண்டவனுக்கே சொந்தம்” என்றெண்ணி எப்போதும் அந்தப் பரம்பொருளையே தியானித்துக்கொண்டும், துதித்துக்கொண்டும், வணங்கிக் கொண்டு மிருப்பார். அவருடைய ஒரு சுவாசமேனும் கடவுளை மறந்துபோனது கிடையாது. ஆகையினால் அவர் தெய்வத் தன்மையுடன் விளங்கினார்.

எப்போதும் நபியவர்கள் சாந்தகுணமுடையவராயிருந்து அநாதைகளுக்கு இரங்கி அவர்களிடம் ஒரு தந்தை தனயனிடம் பாராட்டும் கருணை பாராட்டி அவர்களை ஆதரித்து வந்தார். ஏழைகளுக்கு இரக்ஷக

ராயிருந்து உதவிபுரிந்து வந்தார். "ஏழைக்கிரங்கும் தோழமை கொள்ளு" என்பது நீதியல்லவா?

நபியவர்கள் ஏழைகளுடைய ஈனநிலையைத் தமது கண்கொண்டு பார்க்க மனஞ் சகியார். அவர்களுடைய துன்பத்தைச் செவியிலே கேட்கவும் நடுங்குவார். புருஷனை யிழந்த பூவையர்க்கு வேண்டிய சகாயங்களைச் செய்துவந்தார்; தம்மை யடைந்தவர்க்கு அடைக்கலஸ்தானமாக விளங்கினார். எல்லோரையும் சகோதரராகப் பாவித்து இனியவை சொல்லி வந்தார்.

"எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

என்று தாயுமானவர் கூறியிருக்கிறாரல்லவா?

நபியவர்கள், உணவு கொள்ளும்போதெல்லாம் ஏழை எளியவர்களைத் தம்முடன் சமபந்தியிலே உட்கார வைத்துக்கொண்டு உண்டு அவர்கள் மனமகிழ அவர்களுக்கிதஞ் செய்வார். இதனையவர் பெருந்தருமமாகக் கருதியிருந்தார். இது அருமையான குணம். இந்த அரிய குணம் நபியவர்களைப்போல் பெரும் பொருள் படைத்த ஒருவரிடம் அமைவதரிது.

நபியவர்கள், தம்முடைய வயல்களில் வேலை செய்யும் வேலையாட்கள் தங்களிஷ்டப்படி தானியங்களை யெடுத்துக் கொள்வதை நேரிலே கண்டாலும் பிறர் கூறக்கேட்டாலும் அவர்கள் மீது கோபங்கொண்டு அவர்களைத் தண்டிக்கமாட்டார்; அப்போது புன்னகை கொள்வார்; ஆண்டவனை நினைத்துத் துதிப்



பார். இவ்வாறே தமது தோட்டங்களிலே கனிகளைப் பறித்து உண்பவரிடமும் கருணை காட்டுவார்.

இப்படி எளியவர்க்கும் எளியவர்களாக விளங்கிய நபியவர்கள், மானிடரிடத்தன்றி வாயில்லா ஜீவன்களாகிய பசுபட்சிகளிடமும் பெருங்கருணை பாராட்டி வந்தார். மிருகங்கள் பயிர்களிலே மேய்ந்தாலும் பறவைகள் பயிர்களிலே விழுந்தாலும் அவைகளை ஓட்டவேமாட்டார்; அந்தோ நம்முடைய பயிர்களை இவைகள் அழிக்கின்றனவே என்று எண்ணவேமாட்டார்.

நபியவர்கள் இப்படியிருந்ததனால் அவர்களுடைய நிலங்களெல்லாம், ஒன்றுக்குப் பத்தாக விளைந்தனவே யொழிய குறையவில்லை; வருஷத்தில் இரண்டு முறை மாசூல் கொடுத்து வந்தன. அவரிடமிருந்த கால்நடைகளெல்லாம் வருஷத்திற்கு இரண்டு முறை சூலாய்ப் பெருகிக்கொண்டே வந்தன.

இப்படித் தமது செல்வம் நாளுக்கு நாள் பெருகுவதை யெண்ணி நமது நபியவர்கள் இறுமாப்படைந்ததே கிடையாது. எல்லாம் ஈசன் செயல் என்றெண்ணி மகிழ்வர்.

நாடோறும் இரவில் தமது நண்பர்களுடன் ஆலயஞ் சென்று ஆண்டவனைத் தொழுது தோத்தரிப்பர். பகல்வேளையில் இரவிலே தம்முடனிருந்து வந்த நண்பர்களுடனும் ஏழைகளுடனுமிருந்து போஜனம் செய்து மகிழ்வர்.

தானதர்மம் செய்வதிலும் பெரிய பெரிய தர்ம கைங்கரியம் செய்வதிலும் ஈடுபட்டு உதவிபுரிவதில் ஒரு சிறிதும் பின்வாங்கமாட்டார்.

"அறத்தினூங் காக்கமில்லை அதனை
மறத்தலினூங் கில்லை கேடு"

என்னும் போதனை மலைவிளக்காக விளங்குகிறதன்றோ? ஆதலின், பரமஞானசிகாமணியாகிய ஐயூப் அவர்கள் அறத்தையே தமக்கு அருந்துணையாகக் கொண்டார்.

அப்படி அறத்தைப் பரிபாலித்த ஐயூப் அவர்களின் செல்வம்,

"ஊருணிநீர் நிறைந்தன்றே உலகவாம்
பேரறி வாளன் திரு"

என்பதற் கிலக்காய்ப் பலர்க்கும் பயன்பட்டு வந்தது.

இவைகளையன்றி நபியவர்கள், நிதியில் கைவலுத்தவர்களையும் கைசாய்ந்தோர்களையும் ஒரு தன்மையிலே வைத்து மரியாதை செய்து ஸமரஸபாவனை காட்டி வந்தார்.

இங்ஙனம் ஸமரஸஞானானுபானுவாய் விளங்கிய ஐயூப் அவர்களுக்கு அவர் தந்தையார் காலஞ்சென்றபோது வயது முப்பது. அந்த முப்பதாவது வயதில் அவருக்கு விவாகதசை ஏற்பட்டது. அப்பொழுது கன்ஆன் தேசத்திலே நிகரற்ற சௌந்தரியம் வாய்ந்த ஒரு நபி யிருந்தார், அவர் பெயர் யூசப்நபி. அந்தப் பெரியாருக்கு ஒரு புதல்வர். அவர் பெயர் அப்ராயிம். அவருக்கு றஹ்மத் என்னும் பெயர்கொண்ட ஒரு



செல்வக் குமாரத்தி யிருந்தாள். அந்த மாதரசிக்கும் இதே காலத்தில் விவாகதசை ஏற்பட்டது.

ஐயூப் நபியவர்களின் பெரும்பிரதாபம் பகலவன் ஒளிபோல் பலஸ்தீனு தேசமெங்கும் பரவியிருந்ததுமல்லாமல் கன்ஆன் தேசமுழுவதும் பரவியிருந்தது. இத்தகைய நமது நபியவர்களின் பெருமையறிந்த றஹ்மத்பீபியின் தந்தையார், தமது அருமைப் புதல்வியை, நிகரற்ற தெய்வபக்தியும் பெருஞ்செல்வமுமுடையவரான நமது நபியவர்களுக்கே விவாகம் செய்து கொடுப்பதெனத் தீர்மானம் செய்துகொண்டார்கள். அந்தத் தீர்மானம் கொண்டது முதல் இந்த நமது தீர்மானத்தை எவ்வாறு எந்த சாதனங்கொண்டு நிறைவேற்றுவதென்று சதாகாலமும் சிந்தித்துக்கொண்டிருந்தார்.

றஹ்மத் என்னும் மாதரசியின் பாட்டனாராகிய யூசப் நபியவர்கள் மகாசௌந்தரியம் வாய்ந்தவராகையினால், அந்த சௌந்தரியமே உலகத்தில் ஒரு பெண்ணாய் அவதரித்துள்ளதென்று கண்டவர் வியந்துபேசும்படி றஹ்மத்பீபிக்கு நிகரற்ற சௌந்தரியம் அமைந்திருந்தது. அந்த ரூபலாவண்யத்திற்கேற்ப அந்த மங்கையர் தங்கத்தினிடம் பொறுமை, அடக்கம், சாந்தம், அறிவு, ஸத்தியம் முதலிய உத்தம குணங்களும் அமைந்திருந்தன. அன்றியும் கடவுளிடத்தில் பரிபூர்ணமான பக்தியும் உலக உல்லாசங்களிலே வெறுப்பும் அந்தச் சுந்தரவனிதையினிடம் அமைந்திருந்தன.

குணநலமும் குலநலமும் ஒருங்கே யமையப்பெற்ற றஹ்மத்பீபியின் பெருமை யெல்லாம் நமது

ஐயூப் நபியவர்களின் திருச்செவிக்கெட்டின. அன்று முதல் அந்த ரூபவதியையே மணந்துகொள்ளத் தீர்மானங்கொண்டிருந்தார். பின்னொரு நாள் அந்த மங்கையை விவாகத்துக்குக் கேட்டு நிச்சயிக்கும்பொருட்டுத் தாமே புறப்பட்டுக் கன்ஆன் தேசத்தில் றஹ்மத்பீபி இருந்துவரும் நகரத்துக்குச் சென்றார்.

அங்கே போனதும் நபியவர்கள் றஹ்மத்பீபியின் தந்தையார் இருந்துவரும் மாளிகைக்குச் சென்று அவரை வணங்கித் தாம் இன்னாரென்பதைக்கூறித் தமக்கு றஹ்மத்தை விவாகம் செய்துகொடுக்கும்படி வேண்டிக்கொண்டார். றஹ்மத்தின் தந்தையாகிய அப்றாயீம் என்பவர் ஐயூப் அவர்களுடைய குணங்களையும் குலத்தையும் ஸம்பத்தையும் பற்றி முன்னரே கேள்விப்பட்டு அவருக்கே தமது பெண்ணைக் கொடுப்பதெனத் தீர்மானம் கொண்டிருக்கிறாரல்லவா? அந்தத் தீர்மானத்திற்கேற்ப, நபியவர்களும் வலிதில் வந்து பெண்ணைக் கேட்கவே, அவர், இந்த தாம்பத்தியம் தெய்வசம்மதமென்பது நிச்சயம். இன்றேல் இவ்வாறு நமதெண்ணப்படி அநுகூலங்களும் வந்தமைவ தரிதன்றோ? என்றெண்ணி வியப்பும், மகிழ்ச்சியுமடைந்து, ஐயூப் அவர்களை நோக்கித் "தமது சித்தப்படி என் புதல்வியைத் தமக்கு விவாகம் செய்து கொடுக்கிறேன்" என வாக்களித்துப் பின் காலதாமதமின்றி விவாக உடன்படிக்கையையும் முறைப்படி செய்து றஹ்மத்தை ஐயூப் அவர்களுக்கு மணஞ்செய்து கொடுத்தார்.

இவ்வாறு மங்களகரமாகத் திருமணம் நிறைவேறியதும் ஐயூப் நபி அவர்கள் றஹ்மத்பீபியைத் தம்முடனழைத்துக்கொண்டு புஸரா நகரத்துக்குப் போய்ச் சேர்ந்தார்.

A.S.B.

---

## அதிக ஆசைப்பட்ட சோதிடன்

ஒரு கிராமத்தில் ஒருவன் ஜோதிட சாஸ்திர வல்லவனென்று பொய்வேஷம் போட்டுக்கொண்டு ஏமாந்தவர்களிடம் காசுபறித்துக் காலக்ஷேபம் செய்து வந்தான். அதிர்ஷ்ட வசத்தால் அவன் சொல்லும் ஜோதிடம் பலித்துவந்தது. அவனுடைய பேரைக் கேட்டறிந்த சில திருடர்கள் அவனிடம் வந்து "ஐயா நாங்கள் திருடர்கள், நாங்கள் திருடப் போவதற்குச் சமீபத்தில் ஒரு நாள் வைத்துக் கொடுங்கள். அது எங்களுக்குச் சௌகரியம் ஏற்படும்படியான நாளாயிருக்கவேண்டும் ஐயர், அன்று எங்களுக்கு எவ்வளவு பொருள் கிடைக்கிறதோ அவ்வளவில் நாலிலொருபங்கு உங்களுக்குத் தந்துவிடுகிறோம்" என்றார்கள்.

பிராமணன்.—"நல்லது" என்று கூறிப் பஞ்சாங்கம் எடுத்துப் பார்ப்பதுபோல் பார்த்து ஒரு நாளைக் குறிப்பிட்டுச் சொல்லி, "இன்று யார் எந்தக் காரியம் செய்தாலும் ஜயமாவதில் தடையேயில்லை, அப்படிப்பட்ட நாள் கிடைத்திருக்கிறது, இது உங்களுடைய அதிர்ஷ்டம்" என்றான்.

திருடர்கள்.—"உங்களுடைய அதிர்ஷ்டமும் கூடச் சேர்ந்திருப்பதினாலேதான் அப்படிப்பட்ட நாள் கிடைத்

திருக்கிறது, இல்லாதுபோனால் கிடைக்குமா? நல்லது நாங்கள் போய்வருகிறோம்'' என்று கூறி வணங்கி, முதலில் வந்து ஜோதிடம் கேட்டதற்காக ஒரு ரூபாயும் கொடுத்து விடை பெற்றார்கள்.

ஜோதிடர்.—''மறக்கப்படாது, நான் ஏழைப் பிராமணன்''—என, அவர்கள், ''நாங்கள் மறப்போமா? இப்பொழுது மறந்தால் நாங்கள் அப்பால் உங்களிடம் வரத் தேவையில்லையா? வராமல் முடியுமா? ஒவ்வொரு நாளும் நீங்கள்தான் நாள் பார்த்துத் தரவேண்டும். ஒவ்வொரு தடவையும் சொல்லியபடி பங்கு தருகிறோம்'' என்று கூறி விடைகொண்டு சென்று ஜோதிடர் கூறியபடி ஒரு வீட்டுக்குத் திருடப்போனார்கள். அன்று அவர்களுக்கு வேண்டிய சகல சாதகங்களும் ஏற்பட்டன.

ஆயிரக் கணக்காய்ப் பொருளும் கிடைத்தது. மறுநாளே ஜோதிடனை வந்து கண்டு அவருக்கு தருவதாகச் சொன்னபடி பொருளைக் கொடுத்துவிட்டு வேறொரு நாளும் வைத்துக்கொண்டு அவர்கள் போய்விட்டார்கள். அன்றைக்கும் அவர்களுக்கு அநுகூலமேற்பட்டது. இப்படி ஒவ்வொரு தடவையும் திருடர்களுக்கு அநுகூலமேற்பட்டது. அவர்கள் திருடர்களாயினும் வாக்குத் தவறாமல் தாங்கள் செய்வதாகச் சொன்னபடி ஜோதிடனுக்குச் செய்து வந்தார்கள். ஜோதிடனும் தக்கபொருள் தேடிக்கொண்டான். இப்படி அதிர்ஷ்டம் வந்துசேர, ஜோதிடன் அதிக ஆசைகொண்டு, திருடர்களைப் பார்த்து ''அப்பா ஒரு நல்ல நாள் கிடைத்திருக்கி



றது, அன்று நானும் உங்களுடன் திருடவருவேன். நீங்கள் அன்று கிடைக்கும் பொருளில் எனக்குச் சரிபாதி தந்துவிடவேண்டும். மகளுக்கு கல்யாணம் வருகிறது. அதற்குச் செலவுக்கு வேண்டும்'' என்றான்.

திருடர்கள்.—ஐயா, நீங்கள் வரவேண்டாம், நாங்கள் உங்கள் மகளுடைய கல்யாணத்திற்கு வேண்டிய பொருள் தருகிறோம் என்று வெகுதூரம் சொல்லிப் பார்த்தார்கள். ஜோதிடன் அப்பேச்சைக் கேளாமல் தானும் வருவதாகக் கூறி ஒரு நாளைக் குறிப்பிட்டுக் கூறி அன்று அவர்களுடன் ஒரு வீட்டுக்குத் திருடப் போனான்.

திருடர்கள் வழக்கம்போல் அவ்வீட்டில் இடம் பார்த்து கன்னம் வைத்துத் திருடினார்கள். ஜோதிடனும் உள்ளே நுழைந்து திருட ஆரம்பித்தான். அது ஒரு மாத்துவப் பிராமணன் வீடு. அன்று ஏகாதசியாகையினால் மறுநாள் துவாதசி அதிகாலையிற் பாரணைக்குச் சமைப்பதற்காகச் சகலமும் சமையலறையில் சித்தமாக வைத்திருந்தது. அந்த அறையில் ஜோதிடன் நுழைந்து விளக்குப் பொருத்திப் பார்த்தான். பார்த்ததும் சமயலுக்கு வேண்டியவைகள் சித்தமாயிருக்கக் கண்டு, சந்தோஷப்பட்டு ''நல்லது அடுப்பை மூட்டிக் கொஞ்ச நேரத்தில் சமைத்துத் திருடர்களுக்கும் போட்டு நாமும் வயிறு நிரம்பப் புசித்துவிட்டுப் பிறகு திருடர்கள் திருடிய பொருளில் நாம் 'சரிபாதிப் பொருளை அடைவோம்'' என்று கருதிச் சமைக்கத் தொடங்கினான். திருடர்கள் ஆநந்தமாகத் திருடி மூட்டை கட்டினார்கள்.

திருடர்கள் கொஞ்ச நேரத்தில் வேலையை முடித்துக் கொண்டார்கள். பிறகு பிராமணனை அழைத்தார்கள். அவன் தன்னை மறந்து சமையல் செய்து கொண்டிருந்தபடியால், பலமாய், அட இருங்களேன் ஏன் அவசரம். கிடைத்த சோறை ஏன் இழக்கிறீர்கள்? மூடர்களே" என்று கத்தினான். அந்தச் சத்தத்தில் வீட்டுக்காரன் விழித்துக்கொண்டபடியால் திருடன், திருடன் எனக் கூவினான்.

திருடர்கள். — "ஆபத்து — ஓடியாந்திடுங்கையா சோறு வேண்டாம்" என்று கூவிக்கொண்டு ஓடிவிட்டார்கள். பிராமணன் அகப்பட்டுக் கொண்டான். என்ன சொல்வதிந்த விந்தையை! பிராமணன் தன்னுடைய ஸ்வதர்மம் தவறி நடந்ததன்றிக் கூடாநட்பாகிய திருடர் நட்பைப் பெற்று அவர்களுக்குச் சார்பாயிருந்து முடிவில் அதிக ஆசைக்கிடங் கொடுத்து "பிராமணோ போஜனப்பிரியா:" என்ற வாக்கிற்கிணங்க சந்தாப்பத்தை எண்ணாமல் போஜனத்தில் விருப்பங்கொண்டு தான் கருதி வந்த காரியத்தை மறந்து இடர்க்கடலில் வீழ்ந்தான்.

ஆதலால் இக்கதை போதிப்பதென்ன?

(1) ஸ்வதர்மத்தைக் கைவிடுவது கூடாது.

(2) கூடாத்தகாத நட்பை அடைவது கூடாது.

(3) அதிக ஆசைப்படுவது கூடாது.

(4) என்றைக்கும் ஒருவனை அவனுடைய இயற்கைக்குணம் தொடர்ந்து நிற்கும் என்பது. ஆகிய நான்கு நீதிகளையும் இக்கதை போதிப்பதால் சிறுவர்கள் எப்போதும் இம்மாதிரியான செய்கைகளில் மனஞ் செல்லாத வழியில் நடந்து வரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

டி. ஆர். பாவுசாமி ராவ்.

---

## எளிய சம்சாரி அல்லது
## அதிர்ஷ்டத்துக்குப் புத்தி அநுசரணை

முன்னொரு காலத்தில் ஒரு கிராமத்தில் எல்லாரும் தனவந்தர்களாகவே யிருந்தார்கள். அவ்வூரில் ஒரு எளிய குடித்தனக்காரனுமிருந்தான். அவனுக்கு ஒரு பசுமாடுகூடக் கிடையாது. அவனிடத்திலுள்ள பணம் ஒரு பசு வாங்கவும் போதாததாயிருந்தது. இந்தச் சிரமதிசையில் அவனது மனைவிக்கும் ஒரு பசுமாடு அவசியமென்று தோன்றினது. ஒரு நாள் அவன் "நமது ஆசாரியிடம் சொல்லி, மரத்தால் ஒரு கன்றுகுட்டி செய்து, அதற்கு ப்ரௌன் வர்ணம் கொடுத்துவிட்டால் நிஜமான கன்றுபோலவே இருக்கும். நாளுக்கு நாள் விருத்தியடைந்து ஒரு பசுவாய்விடும்" என்று நினைக்கிறேன்" என்று தன் மனைவியிடம் சொன்னான்.

அவளும் அதை ஒத்துக்கொண்டாள். மரத்தினால் கன்றும் தயாரித்து வர்ணமிட்டாச்சுது. அதில் சிற்பி தனது சாமர்த்தியத்தைக் காட்டும்பொருட்டு, அதைக் கீழே நிறுத்திவைத்தால் அது புல் தின்பதுபோல் தலையைக் கீழே இறங்கும்படியாயும் உதடு அசங்கும்படியாயும் செய்து வைத்திருந்தான்.

கன்று செய்த மறுநாள் காலையில் இடையன் மாடுகளை மந்தைக்கு ஓட்டிக்கொண்டு போகும்போது அவனை அழைத்து "என் வீட்டில் ஒரு சிறிய கன்று இருக்கிறது. அது மாடுகளுடன் சேர்ந்து நடக்கமுடியாது. நீ தூக்கிச் செல்வதானால் அதையும் மந்தைக்குக் கொண்டுபோய் மேய்த்து வா" என்றான்.

மாடு மேய்க்கியும் அதை நிஜமான கன்றாகவே நினைத்துத் தோளில் தூக்கிக்கொண்டு போய் மேய்ச்சல் தரையில் நிறுத்தினான். கன்று புல் தின்னும் பாவனையாய் நின்றுகொண்டிருந்தது. அதைக் கண்டு இடையன் "இது புல் தின்னுகிற மாதிரியில் தானாகவே வீட்டுக்கு நடந்து செல்லுமென்று எண்ணினான். அந்தி நேரத்தில் மாடுகளை வீட்டுக்கு விரட்டும்போது கன்றைப்பார்த்து, இந்நேரம் புல் தின்றாயே! வீட்டுக்கு நடந்து வா, உன்னைத் தூக்கிச் சுமக்க அவசியமில்லை" என்று சொல்லிக்கொண்டு புறப்பட்டு விட்டான்!

வீட்டுவாசலில் நின்றுகொண்டு எளிய சமுசாரி தன்னுடைய கன்று இன்னும் வாராமலிருப்பதைக் குறித்து வழியை நோக்கிக்கொண்டு நிற்கிறான். மந்தையிலிருந்து மாடுகளுடன் இடையன் வருவதைப் பார்த்துத் தன் கன்று எங்கே என்று கேட்கவும், அது மந்தையிலேயே புல் மேய்ந்துகொண்டு அதை விட்டுவரப் பிரியமில்லாமலிருப்பதாய்ச் சொன்னான்.

உடனே சமுசாரி இடையனையும் அழைத்துக் கொண்டு போய்ப்பார்க்க, அங்கு கன்றைக் காணவில்லை



6...

இடையன் "அது எங்கேயோ ஓடிப்போயிற்று" என்றான். 'அது பொய்' என்று சொல்லி அவனைப் போலீஸாரிடம் அழைத்துச் சென்று முறையிட்டான். விசாரித்து, இடையன் சமுசாரிக்கு கன்றுக்குப் பதிலாக ஒரு பசு கொடுக்கும்படி தீர்ப்புச் செய்தார்கள்.

ஸ்திரீ புருஷர்கள் வெகுநாளாக எதிர்பார்த்த எண்ணம் நிறைவேறிற்று. ஆனால் மாட்டுக்குத் தீனி போடுவதற்குக்கூட ஐவேஜு இல்லை. அதனால் மாடு நாளுக்கு நாள் மெலிந்து இறந்து போயிற்று. பிறகு அதன் தோலை விற்றாவது காசாக்கலாமென்று நினைத்துச் சமீபத்திலுள்ள பட்டணக்கரைக்குப் புறப்பட்டான். மார்க்கத்தில் இறக்கைகள் ஒடிந்துபோன ஒரு அண்டங்காக்கை ஒரு புறத்தில் இருந்தது. அதன்மேல் இரக்கங்கொண்டு அதைத் தன் தோலில் சுற்றித் தூக்கிக்கொண்டு போனான். வழியில் ஓர் இயந்திரசாலை யிருந்தது. அதற்கருகாமையில் போனதும் பெருங்காற்றும் மழையும் தொடங்கிவிட்டன. உடனே இயந்திரசாலைத் தலைவன் வீட்டுக்குப் போய் தலைவியைக் கண்டு தான் அவ்விடத்தில் ராத்திரி தங்கியிருக்க அனுமதி பெற்றான். அந்த அம்மாளும் அவனுக்கு ரொட்டியும் பாலாடையும் கொடுத்துப் படுக்கவும் இடங்கொடுத்தாள். சற்று நேரம் இரமித்து யாரோ கதவைத் தட்டின சத்தம் கேட்டது; உடனே எஜமானி வந்து கதவைத் திறந்துபார்த்து, வந்தவர் குரு என்று கண்டு, "என் கணவன் வீட்டிலில்லை, நாமிருவருமாக விருந்துண்போம்" என்றாள்.

அப்படியே வருவல், பொரியல், பஞ்சாமிர்தம் பக்ஷணங்கள், சாராயம், எல்லாம் பரிமாறி போஜனம் நடந்துகொண்டிருந்தது. இதையெல்லாம் தூங்குகிற வனைப்போல் பாசாங்கு செய்து பட்டிக்காட்டான் கவனித்துக்கொண்டே யிருந்தான். திடீரென்று கதவைத் தட்டின சத்தம் கேட்டது. தன் கணவன் வந்துவிட்டானென்று அவளுக்குத் தெரிந்தது. உடனே "ஐயையோ! புருஷன் வந்துவிட்டானே" என்று விரைந்து பதார்த்தங்கள் ஒவ்வொன்றையும் வெவ்வேறிடத்தில் ஒளித்துவிட்டுத் தன் சோரநாயகனை குருவையும் ஒரு குழுமையில் உட்கார்த்தி நிமிஷ நேரத்தில் கதவைத் திறந்து "இந்த மழையிலும், காற்றிலும் இம்மட்டாவது ஈசுவர கிருபையால் சாவதானமாய் வந்து சேர்ந்தீர்களே! அதுதான் பெரிய காரியம்" என்று உபசார வார்த்தை சொன்னாள். வீட்டுக்குள் நுழைந்ததும், "அது யார் அங்கே படுத்திருப்பது?" என்று மனைவியைக்கேட்டான். அவள் யாரோ வழிப்போக்கன்; மழைக்குத் தங்கவேண்டுமென்றான், அவனுக்கு இடங்கொடுத்தேன், ரொட்டியும் பாலாடையும் கொடுத்தேன்" என்றாள்.

" அதில் எனக்கு ஆக்ஷேபணை யொன்றுமில்லை. எனக்கு ஏதாவதிருந்தால் கொடு, எதுவானாலும்சரி சீக்கிரம்கொடு" என்றான். உடனே ரொட்டியும், பாலடையும் கொண்டு வந்தாள், யந்திரசாலையின் எஜமான் தன்னுடன் கூடவிருந்து கொஞ்சம் ஆகாரம் பண்ணிக் கொள்ளும்படி வழிப்போக்கனைக் கூப்பிட்டான்.

இரண்டாந்தரம் கூப்பிட வேண்டுமென்று வைத்துக் கொள்ளாமல் உடனே அவன் எழுந்துசென்றான்.

வீட்டுக்குள் எஜமான் தோலையும் காக்கையையும் பார்த்து அதென்னவென்று கேட்டான். வழிப்போக்கன் "அதில் ஒரு தீர்க்கதரிசி இருக்கிறார். அவர் ஒரு சமயத்தில் 4-கேள்விகளுக்குத்தான் ஜவாப் செய்வார் 5-வது கேள்விக்குச் சும்மாவிருந்துவிடுவார்; பதிலுரைக்கமாட்டார்" என்றான்; "அப்படியானால் எனக்காக ஏதாவது சொல்லச்சொல்லும்" என்றான் எஜமான்.

உடனே வழிப்போக்கன் காக்கையின் தலையைத் தட்டினான். அது கிர்ர் என்று சத்தமிட்டது.

எஜமான்:—"அது என்ன சொல்லுகிறது?"

வ. போ.—"தலையணையின்கீழ் சாராயம் இருக்கிறதென்கிறது." உடனே எஜமான் பரீக்ஷித்தார். அப்படியேயிருந்தது 'பிறகு' என்றார். இரண்டாம் முறை தட்டினான் வழிப்போக்கன். மறுபடியும் சத்தமிட்டது. அதன் பொருள் கரியடுப்பின் கீழ் வருவல் இருக்கிறதென்றான். மூன்றாவதாகப் படுக்கையில் பஞ்சாமிர்தம் இருக்கிறதென்றும் நான்காவதாகப் படுக்கையின் கீழ் அடியில் பக்ஷணங்களிருப்பதாயும் சொல்வதாகச் சொன்னான். அந்தப்படி ஒவ்வொரு முறையும் பரீக்ஷித்ததில் சரியாகவே யிருந்தது.

ஐந்தாம் முறையும் குறிகேட்க வற்புறுத்தினார். எஜமான். இம்முறை காகம் பெருத்த குரலாய்ச் சத்த

மிட்டது. "இது அத்தனை ரஸமானதல்ல. அதைப்பற்றி அதிகம் விசாரிக்கவேண்டாம். தற்காலம் இந்த ... பதார்த்தங்களையும் புஜிப்போம்" என்றான். வழிப்போக்கன் வெளிப்புறம் யாரோ அயோக்கியன் குலுமைக்குள் ஒளிந்திருக்கிறானும் இருவரும் பரீக்ஷிக்கச் சென்றார்கள். வழிப்போக்கன் முன்னதாகச் சென்று குலுமையைச் சாய்த்தான். குருக்கள் பிடித்தான் ஓட்டம். இந்தச் சந்தோஷத்தில் எஜமான் அவ்வழிப்போக்கனுக்கு நூறு பவுன் இனாம் செய்தனுப்பினான். வழிப்போக்கனும் வீடு சேர்ந்து சுகமாக வாழ்ந்தான்.

செல்வம் வருங்கால் தடுப்பினும் தடைபடாது. தீயோருக்குக் கைக்குக் கிட்டினதும் வாய்க்குக் கிட்டாது என்பதை அறியலாம். (தேசபந்து).

---

## பத்ராதிபரும் ரிபோர்டரும்

ஒரு பத்ராதிபர் எப்போதும் உண்மையாயும் பிழைகள் இல்லாமலும் எழுதவேண்டுமென்று ப்ரதிக்ஞை செய்துகொண்டு அப்படியே தமது உதவி ஆசிரியர்களும் அனுஷ்டித்து வரவேண்டுமென்று சொல்லியிருந்தார். அதன்படியே தமது மேஜைக்கருகில் "பிழையின்மை; பிழையின்மை; பிழையின்மை." என்று ஒரு அட்டையில் எழுதித் தொங்கவிட்டிருந்தார். ஒருநாள் ஒரு ரிபோர்டர் ஒரு மீட்டிங்கைப்பற்றிய விவரமடங்கிய வ்யாஸம் ஒன்று எழுதிக்கொண்டுவந்து பத்ராதிபரிடம் கொடுத்தார். அதில் "மூவாயிரத்துத் தொளாயிரத்து தொண்ணூற்றொன்பது கண்களும் ப்ரஸங்கியைப் பார்த்த வண்ணமாகவே இருந்தன" என்று ஒருவாக்யம் இருந்தது.

"இதென்னது நிரம்ப அசந்தர்ப்பமான வாக்யம்" என்று பத்ராதிபர் கேட்டார்.

"அங்கே வந்திருந்தவர்களில் ஒருவருக்கு ஒரு கண் பொட்டை" என்று பதில் சொன்னார், ரிபோர்டர்.

# பாலவிநோதினி

## குழந்தைகளின் அன்பன்

| | | |
|---|---|---|
| வருட சந்தா தபாற் கூலி யுள்பட | இந்தியா, பர்மா, சிலோன் ... | ரூ. 1 8 0 |
| | பிறந்து, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ... | ரூ. 2 0 0 |
| தனிச்சஞ்சிகை | ... ... விலை | ரூ. 0 2 0 |

1. பத்திரிகைக்கு ஜனவரி௴ முதல் டிசம்பர்௴ வரையில் ஒரு வருஷக்கணக்கு. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜனவரி மாதம் முதற்கொண்டே சஞ்சிகைகள் அனுப்பப்படும். ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா இடையாது.

2. சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் முழு விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

3. சந்தாத்தொகையை முன்னாடி செலுத்தியாவது அல்லது வி. பி. யில் கட்டியாவது பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

4. வி.பி. யில் பெற்றுக் கொள்வதானால் அணா மூன்று அதிகமாயிச் செலவாகிறபடியால் சந்தாத்தொகையை மணியார்டர் செய்வதே நலம். இது முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது.

5. யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் ஒரு மாதத்திற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும்.

6. இடம்மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புதுவிலாசத்திற்கு வந்து சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தை அறிவிக்கவேண்டும்.

7. சந்தா நெம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

### விளம்பர விகிதம்

| | |
|---|---|
| ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு | ... ரூபா 10—0—0 |
| அரைப் பக்கத்திற்கு ,, | ... ரூபா 5—0—0 |

காண்டிராக்ட் ரேட்டானால் சகாயமுண்டு.

விலாஸம்:—மானேஜர்—பாலவிநோதினி ஆபீஸ்,
323, திருவொற்றியூர் ஹைரோட், சென்னை.

# அமிர்தாஞ்சனம்.

சர்வ நோய்களுக்கும்

ஸித்த ஔஷதம்




விலை அணா 1) அணா 0-10-0

இருபத்தைந்து வருஷமாக
லக்ஷக்கணக்காக விற்று வருகிறது
அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு
அழகாய் பாக்கிங்செய்து உபயோகத்துக்குத் தயாராய்

## எல்லா நோவுக்கும்

ஒரு கைகண்ட ஔஷதம் அமிர்தாஞ்
சனமே. தலைவலி, முதுகுவலி, கீல்பிடிப்பு முத
லிய சகலநோய்களையும் நொடிப்பொழுதில் தீர்க்கும்.

## அமிர்தாஞ்சன் டிப்போ,

7, தம்புச்செட்டி தெருவு, சென்னை.